# ஐரோப்பிய கவுன்சில் தலைவர் மற்றும் ஐரோப்பிய ஆணைய தலைவருடன் பிரதமர் சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் திரு சார்லஸ் மைக்கேல் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோரை 10 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டின் இடையே சந்தித்தார்.

இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றிக்காக இரு தலைவர்களும் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

அடுத்த இந்தியா - ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாடு, நடந்துகொண்டிருக்கும் சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள், காலநிலை மாற்றம் மற்றும் வாழ்க்கை, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் (டிடிசி) உட்பட இந்தியா - ஐரோப்பிய உத்திசார் கூட்டாண்மை ஆகியவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்து தலைவர்கள் விவாதித்தனர்.

செப்டம்பர் 9, 2023 அன்று தொடங்கப்பட்ட இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதாரப் பாதை குறித்தும் தலைவர்கள் விவாதித்தனர். இந்த வழித்தடத்தை விரைவாக செயல்பாட்டுக்கு கொண்டுவர அவர்கள் ஒப்புக்கொண்டனர். இந்த வழித்தடத்தின் கீழ் சோலார் திட்டங்களின் சாத்தியக்கூறுகளையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**